### செம்மரம் வெட்ட வந்ததாக சுட்டுக்கொல்லப்பட்ட

# தி.மலை தொழிலாளியின் உடலை டோலியில் எடுத்துச்சென்ற அவலம்

## சாலை வசதி இல்லாததால் நடுவழியில் நின்ற ஆம்புலன்ஸ்

திருமலை, செப். 18–

ஆந்திராவில் செம்மரம் வெட்ட வந்ததாக சுட்டுக்கொல்லப்பட்ட திருவண்ணாமலை தொழிலாளி உடல் மறுஉடற்கூறு முடிந்து அவரது மகனிடம் ஒப்படைக்கப்பட்டது. மலைப்பாதையில் சாலைவசதி இல்லாததால் டோலி மூலம் சடலம் எடுத்து செல்லப்பட்டது.

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம், ஸ்ரீகாளஹஸ்தி அடுத்த கொல்லப்பல்லி என்ற வனப்பகுதியில் செம்மரம் வெட்ட வந்ததாக கூறி திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையில் உள்ள காணமலை கிராமத்தை சேர்ந்த காமராஜ் என்பவரை கடப்பா வனத்துறை அதிகாரிகள் கடந்த 31ம் தேதி சுட்டுக்கொன்றனர்.

இந்த கொலையில் சந்தேகம் இருப்பதாகவும் மறு பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் மக்கள் கண்காணிப்பகம் சார்பில் உறவினர்கள் ஆந்திர மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிமன்றம் இதுதொடர்பாக மாநில முதன்மை செயலாளர் உட்பட 9 பேர் விளக்கமளிக்கவும், அதுவரை இறந்த காமராஜ் உடலை ஸ்ரீகாளஹஸ்தி அரசு மருத்துவமனையில் வைக்கவும் உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து சமீபத்தில் நடந்த வழக்கு விசாரணையின்போது நீதிபதி, காமராஜ் உடலை மறுபிரேத பரிசோதனை செய்து அறிக்கை வெளியிட உத்தரவிட்டார். அதன்படி, ஸ்ரீகாளஹஸ்தி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவர் முன்னிலையில் இறந்த காமராஜின் சடலம் மறு உடற்கூறு ஆய்வு நேற்று செய்யப்பட்டது.

தொடர்ந்து வழக்கறிஞர் ரவி முன்னிலையில் ஸ்ரீகாளஹஸ்தி தாலுகா காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சுதர்சனபிரசாத் காமராஜ் உடலை மகன் ராமராஜனிடம் ஒப்படைத்தார்.

இதையடுத்து உடலை அடக்கம் செய்வதற்காக ஜவ்வாதுமலையில் உள்ள காணமலை கிராமத்திற்கு கொண்டுசெல்ல முடிவு செய்தனர். இதற்காக ஆந்திர அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட டெம்போ டிராவல்ஸ் ஆம்புலன்ஸ் மூலம் உடல் கொண்டு செல்லப்பட்டது.

ஆனால் கிராமத்திற்கு மலைபாதை வழியாக ஆம்புலன்ஸ் செல்ல முடியாமல் காணமலை கிராமத்தில் இருந்து 5 கிலோமீட்டர் தூரத்திற்கு முன்னதாகவே நின்றுவிட்டது. எவ்வளவு முயற்சி செய்தும் ஆம்புலன்ஸ் வாகனத்தை இயக்க முடியவில்லை.

இதையடுத்து இரவு 10 மணிக்கு மேல், காமராஜ் உறவினர்கள் மற்றும் கிராம மக்கள் டோலி கட்டி சடலத்தை கிராமத்திற்கு தூக்கி சென்றனர்.

இந்த சம்பவத்தின் போது போளூர் தாசில்தார், இன்ஸ்பெக்டர், கலசப்பாக்கம் இன்ஸ்பெக்டர் ஆகியோர் உடனிருந்தனர்.

ஆம்புலன்ஸ் வசதி இல்லாததால் சடலத்தை தோளில் சுமந்து செல்லும் சம்பவங்கள் வடமாநிலங்களில்தான் நடந்து வந்தது. ஆனால் வளர்ந்த மாநிலம் என கூறப்படும் தமிழகத்திலும் சாலை வசதி இல்லாததால் சடலத்தை டோலியில் சுமந்து செல்லும் அவலநிலை உள்ளது. இது பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



காணமலைக்கு ஆம்புலன்ஸ் செல்ல வழி இல்லாததால் தொழிலாளி உடல் டோலி மூலம் எடுத்துச்செல்கின்றனர்.

தமிழ் முரசு Tue, 18 September 2018
tm.dinakaran.com/c/32303361